## 2

# தேவனைப் பற்றிய நமது நம்பிக்கைகளுக்கு ஒரு வசனப்பகுதியை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது

## (பகுதி 2)

*தொடங்குவதற்கு: மக்களில் பலர், தேவன், பரிசுத்த ஆவியானவர், இயேசு, சபை, இரட்சிப்பு மற்றும் பிற தலைப்புக்கள் பற்றிய வேதாகமரீதியான உபதேசங்களைத் தழுவிக்கொள்ள விரும்புகின்றனர். எடுத்துக்காட்டுகளில் இருந்து பொதுவிதிக்குச் செல்லுதல் என்ற முறைமை அல்லது அணுகுமுறை இதற்கு உதவியாக இருக்கக் கூடும். கடினமான வசனப்பகுதிகளை விளக்குவதற்கு, மிகச் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடிய வசனப் பகுதி களைப் பயன்படுத்துதல் என்பது, வேதவசனப் பகுதிகளை நடைமுறைப் படுத்துவதற்கான நமது முயற்சிகளில் உதவக்கூடும்.*

கிறிஸ்தவர்கள் நம்ப வேண்டியது என்ன? “வேதாகமம் போதிப்பது என்னவோ, அதை நாம் நம்ப வேண்டும்” என்பது வேதாகமத்தின் ஏவுதலை ஏற்றுக்கொள்பவர்களுக்கான சுலபமான பதிலாக உள்ளது. இருப்பினும், அந்தப் பதிலின் சுலபமான தன்மை தவறாக வழிநடத்துவதாக இருக்கலாம். வேதாகமத்தை விசுவாசிக்கும் பலர், வேதாகமம் போதிப்பதை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்கின்றனர், ஆனால் அது போதிப்பது என்ன என்பதைப் பற்றிக் கருத்து வேறுபடுகின்றனர். வேதாகமம் போதிப்பதை நாம் விசுவாசிக்கும்படிக்கு, அது போதிப்பது என்ன என்பதை நாம் எவ்வாறு அறிய முடியும்?

இந்தப் பாடமும் இதற்கு முந்திய பாடமும், அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க உதவும்படி வடிவமைக்கப் பட்டுள்ளன. இவைகள் வேதாகமத்தின் போதனைகளை நமது விசுவாசமுறைமைக்கு நடைமுறைப் படுத்துவது எவ்வாறு என்பதைப்பற்றி உரைக்கின்றன. ஒவ்வொருவரும் ஒரு “இறையியலை” - தேவனைப் பற்றியும் மனிதருடனும் இந்த அண்டத்துடனும் அவரது செயல்கள் பற்றியுமான நம்பிக்கைகளின் முறைமை ஒன்றை - கொண்டுள்ளனர். நமது இறையியல் என்பது தேவனுடைய வசனத்தின்படி தீர்மானிக்கப் பட்டதாக இருக்க வேண்டும். இந்தப் படிப்பில், பல்வேறு தலைப்புகள் மீது வேதாகமம் போதிப்பது என்ன என்பதைத் தீர்மானிப்பதற்கான தேடலானது, “இறையியல்

விளக்கம்'' என்று அழைக்கப்படுகிறது.

விளக்கம் அளிப்பவர்கள் என்ற வகையில் நாம், வேதாகமம் போதிப்பது என்ன மற்றும் அதனால் நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்பதை நாம் எவ்வாறு வெற்றிகரமாகக் கற்றுக்கொள்ள முடியும்? நமது முந்திய பாடத்தில் நாம், வேதாகமத் தலைப்புகள் மீதான முடிவுகளை நாம் சரியாக அடையக்கூடுவது எவ்வாறு என்பதற்கான நான்கு ஆலோசனைகளில் முதல் இரண்டு ஆலோசனைகளைக் கண்ணோக்கினோம். "ஒரு பாடக்கருத்தின் மீதான முடிவுகளை வசனப்பகுதிகளின் தெளிவான அர்த்தத்தையும் நடைமுறைப் பயன்பாட்டையும் கண்ணோக்குங்கள்'' என்பது முதலாவதாக இருந்தது. "ஒரு பாடக்கருத்தின் மீதான வேதவசனங்களின் இறையியல்ரீதியான மறைகருத்துக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்'' என்பது இரண்டாவது ஆலோசனையாக இருந்தது. இங்கு நாம், இன்னுமுள்ள இரண்டு ஆலோசனைகளைக் கண்ணோக்குவோம்.

## பாடக்கருத்தின் மீது வேதாகமம் போதிக்கும் எல்லாவற்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள்

ஒரு குறிப்பிட்ட பாடக்கருத்தின் மீது வேதாகமம் போதிக்கும் எல்லாவற்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்தல் என்பது வேதாகமத்திற்கு விளக்கம் அளித்தலில் சரியான முடிவுகளை அடைவதற்கான மூன்றாவது அவசியமான விஷயமாக உள்ளது. எடுத்துக்காட்டாக நாம், தேவனைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்று அறிய விரும்பினால், தேவனைப் பற்றி வேதாகமம் கூறும் ஒவ்வொரு கருத்தையும் நாம் வாசிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. நாம் வாசித்தவற்றில் இருந்து, தேவனைப் பற்றிய பலகருத்துக்களை உள்ளடக்கிய விவரிப்பை நாம் ஒன்றாக்க முடியும், மற்றும் இதன் விளைவாக வருவது நாம் தேவனைப் பற்றி விசுவாசிக்க வேண்டியதாக உள்ளது. *வேதாகமம் சீர்பொருத்தமானது, அதாவது வேதாகமம் போதிக்கும் ஒவ்வொரு விஷயமும் இறையியலின் சீர்பொருத்தமான முறைமையாக உள்ளது என்பதே இங்கு அடித்தளமாக இருக்கும் யூகம் என்பது தெளிவு.*[1] வேதாகம போதனைகள் முரண்படுவதாகக் காணப்படுகின்றன என்றால், வேதவசனங்களை விசுவாசிக்கும் நாம், அந்த முரண்பாடு தோற்றப்பிழையாக மாத்திரமே உள்ளது - அதாவது, அதிக தகவல்கள் அறியப்படக் கூடுமென்றால், எந்த முரண்பாடும் மறைந்துவிடும் - என்று யூகிக்க முடியும்.

### "எடுத்துக்காட்டுகளில் இருந்து பொதுவிதிக்குச் செல்லும் முறை"

வேதவசனத்திற்கான இந்த அணுகுமுறை, வேதாகமப் படிப்பின் "எடுத்துக்காட்டுகளில் இருந்து பொதுவிதிக்குச் செல்லும் முறை'' என்று அழைக்கப் பட்டுள்ளது.[2] "விதிவருநிலை'' என்ற வார்த்தை, குறிப்பிட்ட விஷயங்களில் இருந்து பொதுவிதியை அறிந்துணர்தல் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பொருள்கள் கீழே போடப்படும்போது விழுகின்றன என்பதை ஒருவர் உற்றுக்கவனித்து இருப்பார் என்றால் அவர், விழும்பொருள்களின் பலவிஷயங்களை முடிவு செய்தலை அடையலாம். இவ்வகையான - பல எண்ணிக்கையிலான குறிப்பிட்ட விஷயங்களில் ("விழும் பொருள்கள்") இருந்து

ஒரு பொதுவிதியை ("ஈர்ப்புவிசையின் விதி") அறிதல் என்ற - உணர்ந்தறிதல் விதிவருநிலை உணர்ந்தறிதல் என்று அறியப்பட்டுள்ளது. இது மக்களுக்கு இயல்பாகவே வருகிற உணர்ந்தறிதல் வகையாக உள்ளது.[3]

''விதிவருநிலை உணர்ந்தறிதல்'' என்பது அறிவியல் ஆய்விற்கும் அடிப்படையாக உள்ளது. அறிவியல் அல்லது தொழில் நுட்பத்தில் ஒருவர் பிரச்சனை ஒன்றை எதிர்கொள்கிறார் என்றால், பிரச்சனையைப் பற்றி அறியப்பட்ட எல்லா உண்மைகளையும் அவர் எடைபோடுகிறார், சாத்தியமான தீர்வுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறார், மிகச்சிறந்த தீர்வை முடிவு செய்கிறார் மற்றும் அதை முயற்சி செய்து பார்க்கிறார். அது சரிவரவில்லை என்றால், பின்பு அவர் இன்னொரு தீர்வை முயற்சி செய்கிறார். மீண்டுமாக, சரியான தீர்வை - பொதுவான உண்மை என்று அழைக்கப்படும் விஷயத்தை -அடைய முயற்சி செய்வதற்கு, குறிப்பிட்ட விஷயங்கள் ("அறியப்பட்ட எல்லா உண்மைகள்") பயன்படுத்தப் படுகின்றன. வேதாகமக் கேள்வி அல்லது தலைப்பு ஒன்று குறித்த வேதாகம சாட்சியங்கள் யாவும் ஆழ்ந்து சிந்திக்கப்படுதல் என்ற முறைமையின் கருத்தில் இது செய்யப்பட்டு, பின்பு முடிவுகளை அடைவதற்கு அந்த சாட்சியங்கள் யாவும் ஒன்றாக வைக்கப்படுதல் என்பது வேதாகமத்தை "அறிவியல்ரீதியாக" படிக்கும் முறை என்று அழைக்கப்பட முடியும்.

"விதிவருநிலை உணர்ந்தறிதல்" முறைமையானது தர்க்கரீதியான மற்றும் அறிவியல்ரீதியான சொற்றொடர்களில் விவரிக்கப் பட்டுள்ளது என்ற உண்மை, சில வட்டாரங்களில் புகழ்ச்சியின்மையைக் கொண்டு வந்துள்ளது. மக்களில் சிலர், "ஒத்தவாக்கியப் பிரசங்கித்தல்" என்று தாங்கள் அழைக்கும் விஷயம், ஒரு கருத்தை நிரூபிப்பதற்கு வேதவசனங்களை அவை காணப்படும் சந்தர்ப்பப்பொருளைக் கண்டுகொள்ளாது ஒன்றாக இடுதலாக உள்ளது என்று இதை மறுக்கின்றனர். இப்படிப்பட்ட பிரச்சனை நிலவக்கூடும் என்பது ஒப்புக்கொள்ளத் தக்கதே; அதைப்பற்றி நாம் இப்பாடத்தின் பிற்பகுதியில் ஆராய்வோம். மற்றவர்கள், ''தர்க்கவியலை'' வேதவசனத்திற்கு நடைமுறைப்படுத்தும் விருப்பத்தை அல்லது தேவனுடைய ஜீவனுள்ள வசனத்தை அது ஏதோ விதிகளின் பதிவேடாக மாத்திரம் உள்ளது அதை அறிவியல் அல்லது வரலாற்றுப் புத்தகம் போன்று பகுத்தாய்வு செய்யலாம் என்ற கருத்தைப் பழித்துரைக்கின்றனர்.

பிந்திய இந்த மறுப்புரைக்கு நாம் மூன்று வழிகளில் பதில் அளிக்கலாம்: (1) வேதாகமம் *வெறும்* அறிவியல் அல்லது வரலாற்றுப் புத்தகமாக இருப்பதில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம், அது "ஜீவனும் வல்லமையும்'' கொண்டுள்ள (எபிரெயர் 4:12) தேவனுடைய வசனமாக உள்ளது மற்றும் அதன் பொருளடக்கங்களை ''உண்மையும் நன்மையுமான" இருதயத்தோடு (லூக்கா 8:15) உள்வாங்கிக் கொள்பவர்கள் மீது அது செயல்தாக்கம் கொண்டுள்ளது. (2) வேதாகமம் என்பது மனித மொழியில், மனிதரின் மனதிற்குச் செய்தித்தொடர்பாகவும் உள்ளது. அதை (மனதில்) புரிந்துகொள்வதற்கு நாம் (உலகப்பிரகாரமான புத்தகங்கள் பற்றி நாம் கொண்டுள்ள யூகங்களில் இருந்து மாறுபட்ட யூகங்களுடன் நாம், வேதாகமம் பற்றிய நமது படிப்பைத் தொடங்கினாலும்) ஒரு அறிவியல் அல்லது வரலாற்றுப் புத்தகத்தை அணுகும் அதேவழியில் அணுகவேண்டும். ஆகையால், உலகப்பிரகாரமான பாடக்கருத்துக்கள் பற்றிய முடிவுகளை அடைவதற்கு நாம் பயன்படுத்தக் கூடிய அதே தர்க்கரீதியான (அல்லது அறிவியல் ரீதியான)

அணுகுமுறையையே, வேதாகமம் மற்றும் அதில் உள்ள இறையியல்ரீதியான தலைப்புகளில் இருந்து முடிவை அடைவதற்கும் பயன்படுத்த வேண்டும். (3) விதி வருநிலை முறையைப் பயன்படுத்துலுக்கு எதிராக விவாதம் செய்பவர்கள், அதை சீர்பொருத்தமாக செய்ய முடியாது; அவர்கள் தங்கள் முடிவுகளை விதிவருநிலை முறைமைகளினாலேயே அடைகின்றனர், மற்றும் அவர்கள் தர்க்கவியலைப் பயன்படுத்துவதற்கு எதிரான தங்கள் விவாதங்களை தர்க்கரீதியாகவே ஏற்படுத்துகின்றனர்.

இந்த முறைமை எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம், வேதாகம பாடக்கருத்து ஒன்றைப் பற்றிய தேவனுடைய சத்தியத்தைக் கண்டறிவதற்குப் பின்வரும் எட்டு படிநிலைகள் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக.

### "விதிவருநிலை முறைமை"யைப் பயன்படுத்துவதற்கான ஒரு உதாரணம்: ஞானஸ்நானம்

ஒரு உதாரணம் என்ற வகையில் நாம், ஞானஸ்நானம் என்ற பாடக்கருத்திற்கு மேற்கூறப்பட்ட அந்த எட்டு படிநிலைகளும் எவ்வாறு நடைமுறைப்படுகின்றன என்று கண்ணோக்குவோம்.

*படிநிலை 1:* ஞானஸ்நானம் என்ற விஷயத்தில், ஒரு ஒத்தவாக்கிய அட்டவணை அல்லது வேறொரு ஆராய்ச்சிக் கருவியைப் பயன்படுத்துவதால் நாம், வேதாகமத்தில் "ஞானஸ்நானம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை அல்லது அதன் வடிவம் ஒன்று 118 முறைகள் காணப்படுகின்றன என்பதைக் கண்டறிவோம்.[4] அந்த எண்ணிக்கையில், பதினான்கு முறைகள் இவ்வார்த்தை யோவான் "ஸ்நானனை" அல்லது ஸ்நானகரைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இத்துடன் கூடுதலாக இவ்வார்த்தை, ஞானஸ்நானச் சடங்கைப் பற்றி நாம் அறிந்துள்ள வகையில் ஒன்றும் செய்வதற்கில்லாத, "கழுவு" அல்லது "கழுவுதல்" என்று ஐந்து முறைகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இதன்விளைவாக, ஞானஸ்நானத்தின் பாடக்கருத்தைப் புரிந்துகொள்வதற்கு தொண்ணூற்று ஒன்பது வசனப்பகுதிகள் வலிவார்ந்த வகையில் பொருத்தமானவைகளாக உள்ளன என்று கூறி, ஞானஸ்நானம் பற்றிய நமது படிப்பை நாம் தொடங்க முடியும்.

நாம் படித்துக் கொண்டிருக்கும் வார்த்தையைப் பயன்படுத்தும் வேதவசனங்களுடன் கூடுதலாக, இந்தப்பாடக்கருத்தைக் கையாளும் மற்ற வசனப்பகுதிகளையும் நாம் கண்டறியலாம். உதாரணமாக நாம், "தேவனுடைய அன்பு" என்பதைப் பற்றிப் படித்தால், தேவனுடைய அன்பை விவரிக்கிற, ஆனால் "அன்பு" என்ற வார்த்தையை ஒருக்காலும் பயன்படுத்தாத, லூக்கா 15ல் உள்ள உவமைகளையும் ஆழ்ந்து சிந்திப்போம். இப்படிப்பட்ட வசனப்பகுதிகளைக் கண்டறிவதற்கு, பின்வரும் மற்ற ஆதார மூலங்களின் உதவி நமக்குத் தேவைப்படலாம்: ஒரு தலைப்புரீதியான வேதாகமம், ஒரு விளக்கவுரை, ஒரு குறிப்புரை வேதாகமம் அல்லது இந்தப் பாடக்கருத்தின் மீதான (*இன்றைக்கான சத்தியம்* நிறுவனத்தாரால் அளிக்கப்படுவது போன்ற) அச்சிடப்பட்ட பாடங்கள். ஞானஸ்நானம் என்ற பாடக்கருத்திற்கு, "ஞானஸ்நானப்படுத்துதல்" என்பதற்கான வார்த்தையைப் பயன்படுத்தாத, ஆனால் "தண்ணீரினால் பிறத்தல்" (யோவான் 3:3, 5) மற்றும்

"திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து" (எபேசியர் 5:26) போன்ற பிற வசனப்பகுதிகள் குறிப்பிடத் தக்கவைகளாக இருக்கலாம்.

*படிநிலை 2:* தேவனைப் பற்றிய சத்தியத்தைக் கற்றறிய நாம் தொடங்கினால், தேவனைப் பற்றி நமது வாழ்நாள் காலமுழுவதிலும் நாம் கற்றறியக் கூடியவற்றைக் காட்டிலும் அதிகமானவற்றை வேதாகமம் கூறுகிறது என்பதை விரைவிலேயே நாம் கண்டறிவோம்! ஆகையால், நாம் தேவனைப் பற்றிக் கற்றறிய விரும்பினால், ஒரு வேளைக்கு அவரது பண்புகளில் ஒன்று அல்லது இரண்டு அம்சங்கள் (உதாரணமாக, தேவனுடைய அன்பு அல்லது தேவனுடைய "தயவு மற்றும் கண்டிப்பு" [ரோமர் 11:22]) என்ற அளவுக்கு நமது படிப்பை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டி இருக்கும். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், தேவனுடைய இயல்பைப் பற்றி அதிகம் அதிகமாகக் கற்றுக்கொள்வதற்கு நமது வாழ்வின் எஞ்சிய பகுதி முழுவதையும் செலவிட வேண்டும்.

ஞானஸ்நானத்தின் விஷயத்தில், "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையின் சில வடிவத்தைப் பயன்படுத்தும் வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் நாம் ஆழ்ந்து சிந்தித்த பின்பு, ஞானஸ்நானம் பற்றிய ஒரு கேள்விக்கு நமது ஆராய்ச்சியைக் குறுக்கிக்கொள்ள நாம் முடிவு செய்யலாம். *நமது உதாரணத்தின் நோக்கத்திற்காக நாம், ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிய கேள்வியின் மீது கவனம் குவிப்போமாக: மக்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியது ஏன்?*

*படிநிலை 3:* "விதிவருநிலை முறைமை" என்பது, ஒரு பாடக்கருத்தின்மீது வேதாகமம் போதிக்கும் எல்லாவற்றின் அடிப்படையில் அந்தப் பாடக்கருத்தைப் பற்றிய முடிவுகளை அடைதலை உள்ளடக்குகிறது என்று நாம் கூறுகையில், இந்த முறைமையானது அந்தப் பாடக்கருத்திற்கு பொருத்தமான வசனப்பகுதிகள் எல்லாவற்றின் அடிப்படையில் முடிவுகளை அடைதல் என்றே உண்மையில் நாம் அர்த்தப்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக, "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்பது நமது கேள்வியாக இருந்தால், பழைய ஏற்பாட்டுக் கற்பனைகள் பொருத்தமாக இராது, ஏனெனில் இன்றைய நாட்களில் நாம் பழைய உடன்படிக்கையின்கீழ் வாழ்வதில்லை.

ஞானஸ்நானத்தின் விஷயத்தில் புதிய ஏற்பாடு, பரிசுத்த ஆவியானரால் ஞானஸ்நானம் (நடபடிகள் 1:5), அக்கினி ஞானஸ்நானம் (மத்தேயு 3:11) மற்றும் "பாடுகளின் ஸ்நானம்" (மாற்கு 10:38, 39) ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறது. இவ்வசனப் பகுதிகள் யாவையும் முக்கியமானவைகளாக இருக்கையில், இவைகள் பிரதான கட்டளையில் உள்ள ஞானஸ்நானத்தின் பாடக்கருத்திற்குப் பொருத்தமானவையாக இருப்பதில்லை. மற்றும் நாம் நமது படிப்பைக் குறுக்கினால், ஞானஸ்நானம் பெறும் முறை (ஞானஸ்நானம் எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது) அல்லது ஞானஸ்நானம் பெறுபவர்கள் (ஞானஸ்நானம் பெறவேண்டியவர்கள் யார்) என்பவற்றைக் கையாளும் வசனப்பகுதிகள், படிக்கப்படும் கேள்விக்கு நேரடியாகப் பொருத்தமானவைகளாக இருப்பதில்லை.

ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிய கேள்விக்குப் பொருத்தமான வசனப்பகுதிகள் யாவை?[5] ஒருவேளை மற்ற வசனப்பகுதிகளும் பட்டியலிடப்பட

முடியும், ஆனால் பின்வருபவை குறைந்த பட்சம் அந்தக் கேள்வியைப் பிரதிநிதித்துவப் படுத்துபவைகளாக உள்ளன:

*"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16அ).*[6]

*"... நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38).*

*அப்பொழுது பிலிப்பு ... இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய்அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். ... அப்பொழுது அவன் ... இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான் (நடபடிகள் 8:35-38).*[7]

*கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு [கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்கும்] ஞானஸ்நானங்கொடுக்கும்படி [பேதுரு] கட்டளையிட்டான் (நடபடிகள் 10:48அ).*

*"(சிறச்சாலைக்காரர்) ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்?" அதற்கு அவர்கள் (பவுலும் சீலாவும்): "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான் (நடபடிகள் 16:30ஆ-34).*

*"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (நடபடிகள் 22:16).*

*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட*

*அடக்கம்பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).*

*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலாத்தியர் 3:26, 27).*

*ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோசெயர் 2:12).*

*அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1 பேதுரு 3:21).*

*படிநிலை 4:* வேதாகமத்திற்கு விளக்கம் அளித்தல் என்ற இந்த மூன்று பகுதித் தொடரின் முந்திய இரண்டு இதழ்களில் தரப்பட்ட ஆலோசனைகளைப் பின்பற்றி, ஒரு வசனப்பகுதி அதன் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதைக் குறித்து நாம் தற்காப்புள்ள முடிவுகளை அடைய முடியும். ஆய்வு விளக்கவுரைக்கு முன்னதாக நடைமுறைப் பயன்பாடு இருக்க வேண்டும்! ஒரு வசனப் பகுதியை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் நாம் புரிந்துகொண்ட பின்பு, அது நாம் பதில் அளிக்க முயற்சி செய்யும் கேள்விக்கு உண்மையில் பொருத்தமானதாக இல்லாதிருப்பதை நாம் கண்டறியலாம்.

செயல்முறையில் இந்த இடத்தில் ஒரு தோல்வியானது சிலரை, வேதாகமப் படிப்பிற்கான இந்த முறைமையை இழிவாகக் கருதும்படி வழிநடத்தியுள்ளது. வசனப் பகுதிகள் ஒரேவிதமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதால், அவை ஒவ்வொன்றின் சந்தர்ப்பப்பொருளைப் பொருட்படுத்தாமல், அவற்றை ஒன்றுகூட்டி இணைத்தல் என்பது தவறான முடிவுகளுக்கு வழிநடத்தலாம்.

மேலே பட்டியல் இடப்பட்டுள்ள வசனப்பகுதிகளைப் படித்தலானது, இவை ஒவ்வொன்றும், மக்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தது *ஏன்* அல்லது அவர்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டது *ஏன்* என்பது பற்றிச் சிலகருத்துக்களைக் கூறுவதால், இவைகள் ஒவ்வொன்றும் ஞானஸ்நானத்தின் நோக்கத்திற்குப் பொருத்தமானதாக உள்ளது. எந்த வேதவசனங்களுக்கும் விளக்கம் அளித்தலில் உள்ள எந்தப் பிரச்சனையும், அது தெளிவாகக் கூறுவதைக் காட்டிலும் வேறு எதையாவது அர்த்தப்படுத்துகிறது என்று நாம் நினைக்கும்படி வழிநடத்தலாகாது.

*படிநிலை 5:* இந்த இடத்தில் நாம், இவ்வசனப்பகுதிகள் போதிப்பதை ஒரு கூற்றிற்குள் ஒன்றிணைக்க முடியும். ஞானஸ்நானம் பற்றிய வசனப்பகுதிகளைக் கண்ணோக்குகையில் நாம், இவைகள் பின்வரும் போதனைகளைக் கொண்டுள்ளதைக் கவனிக்கிறோம்: (1) ஞானஸ்நானம்

*இரட்சிப்புக்கு முந்தியதாக உள்ளது (மாற்கு 16:16). (2) பாவமன்னிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியமானதாக உள்ளது (நடபடிகள் 2:38). (3) ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தலின் விளைவாக உள்ளது (நடபடிகள் 8:35-38). (4) ஞானஸ்நானம் ஒரு கட்டளையாக உள்ளது (நடபடிகள் 10:48). (5) விசுவாசத்தைத் தொடர்ந்து ஞானஸ்நானமும், விசுவாசத்தின் காரணமாக சந்தோஷத்திற்கு வழிநடத்தப்படுதலும் வருகின்றன (நடபடிகள் 16:30-34). (6) பாவங்கள் கழுவப்படுதலுக்கு ஞானஸ்நானம் அவசியமானதாக உள்ளது (நடபடிகள் 22:16). (7) ஞானஸ்நானம் புதிய ஜீவனை உண்டாக்கிறது (ரோமர் 6:3, 4; கொலோசெயர் 2:12). (8) ஞானஸ்நானம் கிறிஸ்துவுக்குள்ளானதாக இருக்கிறது (ரோமர் 6:3; கலாத்தியர் 3:26, 27). (9) மக்கள் ஞானஸ்நானம் பெறும்போது அவர்கள், விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகள் ஆகின்றனர் (கலாத்தியர் 3:26, 27). (10) பெருவெள்ளம் மக்களில் சிலரைக் காத்த அதேபோன்ற வழியில் ஞானஸ்நானம் மக்களை இரட்சிக்கிறது (1 பேதுரு 3:21).*

*ஒருவேளை, "இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமாக உள்ளது; முழுக்காட்டப்பட்டவர்களை இரட்சித்தல் என்பதே அதன் நோக்கமாக உள்ளது" என்று கூறுவது ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிய மிகச்சிறந்த தொகுப்புரையாக இருக்கலாம். இரட்சிப்பைச் செயல்விளைவுக்குக் கொண்டுவருவது தண்ணீர் அல்ல (1 பேதுரு 3:21); தேவனுடைய கிருபையினால் அளிக்கப்பட்ட கிறிஸ்துவின் இரத்தமே பாவங்களைக் கழுவுகிறது - அல்லது பவுல் கூறியதுபோல, ஞானஸ்நானம் என்பது "தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே" புதிய ஜீவனை உண்டாக்கிறது (கொலோசெயர் 2:12). இந்த வசனப்பகுதிகள், கிறிஸ்தவ யுகத்தில் பொறுப்பேற்கும் நிலையில் உள்ள ஒரு நபர், ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிக்கப்பட இயலாது என்று தெளிவாகப் போதிக்கின்றன.*

*படிநிலை 6:* ஒரேவிதமான வேதவசனப் பகுதிகளில் இருந்து ஒரேவிதமான பாடக்கருத்தின்மீது மற்றவர்கள் அடைந்துள்ள முடிவுகளுக்கு எதிராக நமது முடிவுகளை நாம் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். நமது முடிவு தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தால், நாம் சரியானவர்களாக இருக்கலாம் - ஆனால் நாம் மேற்கொண்டுள்ள நிலைப்பாட்டைத் தற்காக்கக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். இதற்கு மறுபுறத்தில், மற்ற சில வேதாகம வாசகர்கள் அந்தத் தலைப்பைப் பற்றி சில முடிவுகளை எப்போதாவது அடையாதிருந்தால், நமது நிலைப்பாட்டைப் பற்றி நாம் மறுபடி சிந்தித்துப் பார்க்க விரும்பலாம்.

ஞானஸ்நானத்தின் விஷயத்தில், நமது முடிவானது, நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப் படுகிறோம் என்று போதிக்கிற, அப்போஸ்தலர் *16:30, 31* போன்ற வேதவசனங்களுக்கு நேர்மாறானாதாக உள்ளது என்று கூறி, நமது முடிவைப் பற்றிச் சிலர் கேள்வி கேட்கலாம். இருப்பினும், இரட்சிக்கப்படுவதற்கு நாம் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று கூறுதலானது, கிருபையினாலே விசுவாசத்தின் மூலம் நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்ற உண்மைக்கு நேர்மாறானதாக இருப்பதில்லை. இதற்கு நேர்மாறாக, ஞானஸ்நானத்தின் செயல்விளைவிற்கு விசுவாசத்தின் முக்கியத்துவம் வேதவசனத்தில் இருந்து சுலபமாகச் செயல்விளக்கப் படுத்தப்பட முடியும். நடபடிகள் *16:31*ம் வசனம் கூட (*"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்"*) ஞானஸ்நானத்தின் அவசியத்தைப்

பொய்யாக்குவதில்லை; சிறைச்சாலை அதிகாரி விசுவாசித்தபோது, உடனே அவர் ஞானஸ்நானம் பெற்றார் மற்றும் அவர் தமது ஞானஸ்நானத்திற்குப் பின்பு தான் மனமகிழ்ச்சி கொண்டிருந்தார். உண்மையில் அவர் தமது ஞானஸ்நானத்திற்குப் பின்புதான் "விசுவாசமுள்ளவராக" இருந்தார் என்று கூறப்படுகிறது. அவர் விசுவாசித்தபின்பு மற்றும் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு இரட்சிக்கப்பட்டாரா? நடபடிகள் 16ம் அதிகாரம் அந்தக் கருத்தைப் போதிப்பதும் இல்லை அல்லது அதை மறைமுகமாக உணர்த்துவதும் இல்லை. இதன்விளைவாக, மற்ற வசனப்பகுதிகளின் போதனைகள் காரணமாக, இரட்சிக்கப் படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமானது என்ற கருத்து கைவிடப்பட அவசியம் இருப்பதில்லை.

*படிநிலை 7:* நமது முடிவை ஏற்றுகொள்வதற்கு முன் நாம், அக்கருத்து வேதாகமத்தின் பிற இடங்களில் உள்ள எளிய போதனைகளுடன் முரண்படுவது இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமாக உள்ளது என்ற முடிவு மற்ற போதனைகளுடன் முரண்படுவது இல்லை என்பதால், மற்ற சாத்தியக்கூறுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுவது இல்லை.

*படிநிலை 8:* நமது நிறைவான முடிவானது வேதாகமத்தின் மற்ற போதனைகளுடன் முரண்படுவது இல்லை, ஆனால் கிடைக்கும் சாட்சியங்களினால் நிறைவாக ஆதரிக்கப்படுகிறது என்று நாம் உறுதிப்படுத்திய உடனே, அது தேவனிடத்தில் இருந்து வந்த உபதேசம் என்ற வகையில் அதை நாம் விசுவாசித்து, போதிக்க முடியும். இந்த உதாரணத்தைக் காத்துக்கொண்டு, சுவிசேஷத்தின் பிரசங்கியார்கள், ஞானஸ்நானம் "பாவ மன்னிப்பிற்கானது" மற்றும் அது இரட்சிப்புக்கு அவசியமானது என்று அறிவித்தல் அவசியமாக உள்ளது.

**"விதிவருநிலை முறைமையை" தவறாகப் பயன்படுத்துதல்**

வேதாகமப் பாடக்கருத்து ஒன்றின் சத்தியத்தைக் கண்டறிய நாம், "விதிவருநிலை முறைமையை" பயன்படுத்த வேண்டும் என்றிருக்கையில், இந்த முறைமையை நாம் எச்சரிக்கையாகப் பயன்படுத்த வேண்டும். இதன் பயன்பாட்டில் செய்யப்படும் தவறுகள் நம்மை, தவறான முடிவுகளுக்கு வழிநடத்தக் கூடும். செய்யப்படக் கூடிய தவறுகளின் வகைகள் யாவை?

(1) *சாட்சியத்தை மிகையாக மதிப்பிடுதல்.* சிலவேளைகளில், சாட்சியங்கள் குறைவாக இருக்கிறது. இரண்டு வசனப்பகுதிகளில் மாத்திரம் குறிப்பிடப் பட்டுள்ள கடினமான தலைப்பை நாம் கையாண்டால், இருபது வசனப் பகுதி களில் போதிக்கப்பட்டுள்ள ஒரு பாடக் கருத்தின் மீது நாம் கொண்டிருக்கும் நிச்சயத்தை அதற்குக் கொண்டிருக்க மாட்டோம். இரண்டு வசனங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒரு முடிவை அடைய முயற்சித்தல் என்பது, இரண்டு விஷயங்களை மாத்திரம் கொண்டு இயற்கை நிகழ்வு ஒன்றின் மீதான விதியை நெறிப்படுத்த முயற்சி செய்தல் போன்றதாக உள்ளது. இதன் விளைவாக, வேதாகமரீதியான சாட்சியங்கள் ஏராளமாக இராதபோது, நமது முடிவுகளை நாம், உபதேச விதியாக உரைப்பதற்கு மாறாக, மாறுதலுக்கு உட்பட்டதாக உரைத்தல் அவசியமாக இருக்கிறது.

(2) *தெளிவற்ற வசனப்பகுதிகளின் மீது அடிப்படையாகக் கொண்டு*

*ஒரு முடிவை அடைதல்.* சிலவேளைகளில், கவனத்தில் உள்ள வேதவசனப் பகுதிகள் தெளிவற்றவையாக உள்ளன.வேதாகமத் தலைப்பு ஒன்றுடன் தொடர்புடைய, குறிப்பிட்ட ஒரு வசனப்பகுதியானது அந்தப் பாடக்கருத்தைப் பற்றி, மாறுதலுக்கு உட்பட்ட ஒரு முடிவை மாத்திரம் நியாயப்படுத்தலாம். அந்தப் பாடக்கருத்தின் மீது போதிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயமும், இப்படிப்பட்ட வசனப்பகுதிகளில் இருந்து வருகிறது என்றால், அடையப்பட்ட முடிவு(கள்) மாறுதலுக்கு உட்பட்டவையாகவே இருக்க வேண்டும். சாத்தியமான பல அர்த்தங்கள் ஒன்றுகூட்டப்படுதல் என்பது நிச்சயமான முடிவை விளைவிப்பதில்லை.

(3) *ஒரே வகையான வார்த்தை எப்போதும் ஒரேவகையான அர்த்தத்தையே கொண்டுள்ளது என்று யூகித்தல்.* வசனப்பகுதிகள் ஒரேவகையான வார்த்தையைப் பயன்படுத்துவதால் மாத்திரம் அவை தொடர்புபடுத்தப் பட்டுள்ளன என்று யூகித்தல், தவறான முடிவிற்கு வழிநடத்தலாம், ஏனெனில் ஒரே வகையான வார்த்தையானது, மாறுபட்ட சந்தர்ப்பப் பொருள்களில் மாறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்கக் கூடும்.

(4) *சந்தர்ப்பப் பொருளைப் புறக்கணித்தல்.* ஒவ்வொரு வசனப்பகுதியையயும் அதன் சொந்த சந்தர்ப்பப்பொருளில் புரிந்துகொள்ளத் தவறுதலானது, உண்மையில் தொடர்பற்றவையாக உள்ள வசனப்பகுதிகளை ஒன்றிணைக்க வழிநடத்தலாம்.

(5) *எல்லா சாட்சியங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறுதல்.* விதிவருநிலை உணர்ந்தறிதல் என்பது பொதுவாக, எப்போதுமே நிறைவற்றதாக உள்ளது என்பது அதன் ஒரு பண்பாக உள்ளது. முடிவு என்பது, உற்றுநோக்கப்பட்ட குறிப்பிட்ட விஷயங்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதால், மற்ற விஷயங்கள் எழலாம் என்பதற்கான சாத்தியக்கூறு திறந்ததாக நிலைத்துள்ளது. இது, பொதுவான முடிவைப் பொய்யாக்கி, உணர்ந்தறிதலின் செயல்முறையை ஒரு நபர் திரும்பவும் தொடங்கும்படி கேட்டுக்கொள்கிறது. நமது இரட்சிப்பிற்கு அவசியமான சத்தியம் யாவும் வேதாகமத்தில் ஏற்கனவே வெளிப்படுத்தப் பட்டுள்ளன என்று நாம் விசுவாசிப்பதால், *விதிவருநிலையில் உள்ள இந்தப் பிரச்சனை சம அளவு வலிவுடன் வேதாகமத்திற்கு விளக்கம் அளிப்பதில் நடைமுறைப்படுவதில்லை.* நியாயமான முறையில் அடையப்பட்டுள்ள முடிவுகளுக்கு அறைகூவல் விடுக்கும் குறிப்பிட்ட எந்த விஷயமும் ஒருக்காலும் எழாது என்று நாம் நம்புகிறோம். இருப்பினும் விஷயங்களை - கவனிக்கப்படும் பாடக்கருத்துடன் தொடர்புடைய வசனப்பகுதிகளை - காணாமல் விடும் சாத்தியக்கூறும், எனவே தவறான அல்லது முழுமையற்ற முடிவுகளை அடையும் சாத்தியக்கூறும் நமக்குள்ளது. ஆகையால் நாம், எதையேனும் காணாது விட்டுவிட்டுள்ளோமா என்பதைக் காண்பதற்கு சாட்சியங்களைத் தொடர்ந்து மறுபடியும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்; அவசியம் என்று நாம் கண்டால் நமது முடிவுகளை மறுதிருத்தம் செய்ய வேண்டும்.

### தொகுப்புரை

விதிவருநிலை முறைமையைத் தவறாகப் பயன்படுத்தலுடன் தொடர்புடைய அறைகூவல்களில் எதுவும் அந்த முறைமையின் மதிப்பை நீக்கிப்போடுவது இல்லை. உண்மையில், *வேதாகமப் பாடக்கருத்து*

எதன்மீதுமான முழுமையான சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கு, பொருத்தமான வசனப்பகுதிகள் யாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை அடைதல் என்பதற்கு மாற்று எதுவும் இருப்பதில்லை. பின்வரும் பொது அறிவுக்கொள்கை நடைமுறைப் படுகிறது: எந்தத் தலைப்பின் மீதும் சத்தியத்தை அறிவதற்கு நாம், சாட்சியங்கள் யாவற்றையும் ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமாகிறது. விசாரணைகளில் சாட்சிகள், "நான் கூறுவது யாவும் உண்மை, முழுமையான உண்மை, உண்மையைத் தவிர வேறு எதுவும் இல்லை" என்று கூறி ஆணையிடும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.[8] இதே போன்ற ஒரு ஆணை, வேதாகமப் பாடக்கருத்துப் பற்றிய சத்தியத்தைக் கண்ணோக்கும் எவரொருவராலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## தெளிவான வசனப்பகுதிகள் கடினமான வசனப்பகுதிகளுக்கு விளக்கம் அளிக்கட்டும்

ஒரு பாடக்கருத்தின்மீது வேதாகமம் போதிக்கும் எல்லாவற்றையும் நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, சில வசனப்பகுதிகள் புரிந்துகொள்வதற்கு மற்ற வசனப்பகுதிகளைக் காட்டிலும் அதிக சுலபமாக இருக்கும். புரிந்துகொள்ளக் கடினமாக உள்ள வசனங்களுக்கு நாம் எவ்வாறு விளக்கம் அளிக்க முடியும்? இதற்குப் பதிலும், ஒரு குறிப்பிட்ட பாடக்கருத்தின் மீது வேதாகமம் போதிப்பது என்ன என்பதைக் கற்றறிய நான்காவது ஆலோசனையுமாக இருப்பது, பாடக்கருத்தின் மீதான எளிய போதனைகளைப் பயன்படுத்துதல் என்பதே ஆகும். எளிய வசனப்பகுதிகள், (1) கருகலான வசனப்பகுதியின் அர்த்தத்தை ஏற்படுத்த உதவ முடியும் மற்றும் (2) சாத்தியமான தவறான அர்த்தங்களை அது நீக்கிப்போடவும் முடியும்.

### தெளிவான வசனப்பகுதிகள், கருகலான வசனப்பகுதிகளின் அர்த்தத்தை விளக்க உதவுகின்றன

ஒரு பாடக்கருத்தின் மீதான தெளிவான வேதவசனங்கள், நம்மைத் திகைப்பில் ஆழ்த்தும் கருகலான வசனப்பகுதிகளுக்கு விளக்கம் அளிக்க உதவுகின்றன. உதாரணமாக, பரலோக இராஜ்யத்தில் ஒருவர் பிரவேசிக்க வேண்டும் என்றால், அவர் "தண்ணீரினாலும் ஆவியினாலும் மறுபடி பிறக்க வேண்டும்" (யோவான் 3:3, 5) என்று இயேசு கூறியபோது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன? இந்தப் பாடக்கருத்தின்மீது நாம் இந்த வசனப்பகுதியை மாத்திரம் கொண்டிருந்தால், நிக்கொதேமுவைப் போன்றே நாமும் திகைப்படைவோம் என்பது உறுதி. நாம், "மறுபடியும் பிறத்தல்" என்பது, பரிசுத்த ஆவியானவரின் நேரடியான செயலின் விளைவினால் வருகிறதான, கூறப்படுவதைக் காட்டிலும் அதிகம் சிறப்பாக உணரப்படும் அனுபவம் என்று யூகிப்போம். இருப்பினும் இயேசு எதைப் பற்றிப் பேசினார் என்பதை மற்ற வசனப்பகுதிகள் தெளிவாக்குகின்றன.

இயேசு பரத்துக்கேறுவதற்கு முன்னர், விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கட்டளையிட்டபோது, இரட்சிப்பிற்கு "தண்ணீர்" சில விஷயங்களைச் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). அவரது அதிகாரத்துடன் பிரசங்கித்த அவரது அப்போஸ்தலர்கள், மக்கள் இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் (மக்கள்) தண்ணீர் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

*ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுவார்கள் என்றும் அப்போஸ்தலர்கள் குறிப்பிட்டனர் (நடபடிகள் 2:38). "கிறிஸ்துவுக்குள்" இருக்கும் ஒவ்வொருவரும் (கிறிஸ்தவராக இருப்பவர்) ஒரு "புதிய சிருஷ்டியாக" இருக்கிறார் என்று பவுல் எழுதியபோது (2 கொரிந்தியர் 5:17), ஒரு புதிய பிறப்பு (மறுபடியும் பிறந்திருத்தல்) மறைமுகமாக உணர்த்தப்பட்டது. நாம் "சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து" நமது ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாக இருக்கிறபடியால், நாம் "... என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்" என்று பேதுரு கூறினார் (1 பேதுரு 1:22, 23). பவுலின் கூற்றுப்படி, நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நாம் ஒரு புதிய ஜீவனை அனுபவிக்கிறோம் அல்லது "புதிதான ஜீவனுள்ளவர்களாய்" நடந்து கொள்ளுகிறோம் (ரோமர் 6:4).*

*அப்படியென்றால், மறுபடியும் பிறத்தல் என்பதைப் பற்றிப் புதிய ஏற்பாடு போதிப்பது என்ன?*

*யோவான் 3:3, 5 - இரட்சிக்கப்படுவதற்கு நாம் தண்ணீரினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்க வேண்டும்.*

*மாற்கு 16:15, 16 - இரட்சிக்கப்படுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானம் தேவைப்படுகிறது.*

*நடபடிகள் 2:38 - அப்போஸ்தலிக்கப் பிரசங்கித்தலானது, (தண்ணீர்) ஞானஸ்நானத்தை இரட்சிக்கப்பட்டிருத்தல் மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பெறுதல் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திற்று.*

*2 கொரிந்தியர் 5:17 - எல்லாக் கிறிஸ்தவர்களும் புதிய ஜீவனை அனுபவிக்கின்றனர், எனவே அவர்கள் மறுபடியும் பிறந்துள்ளனர்.*

*1 பேதுரு 1:22, 23 - கிறிஸ்தவர்கள் தேவ வசனத்திற்குக் கீழ்ப்படியும்போது அவர்கள் மறுபடியும் பிறக்கின்றனர்.*

*ரோமர் 6:4 - கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெறும்போது, அவர்கள் புதிய ஜீவனை அனுபவிக்கின்றனர்.[9]*

*நமது முடிவு பின்வருமாறு: இவ்வசனங்களின் அடிப்படையில் நாம், தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படிதலுடன் வேதவசனத்தின்படி ஞானஸ்நானம் பெறும்போது, நாம் மறுபடியும் பிறக்கிறோம். இந்த மற்ற வசனங்கள், யோவான் 3:3, 5ன் படி ஒரு நபர் "மறுபடியும் பிறப்பதற்கு" அவரிடம் கேட்டுக் கொள்ளப்படுவது என்ன என்பதைத் தெளிவாக்குகின்றன.*

### *தெளிவான வசனங்கள், கருகலான வசனங்களின் சாத்தியமுள்ள தவறான அர்த்தங்களை நீக்கிப்போட உதவுகின்றன*

*தெளிவான வசனப்பகுதிகள், கருகலான வசனப்பகுதிகளின் நேர்மறையான போதனைகளைத் தெளிவுபடுத்துவதுடன் கூடுதலாக, கருகலான வசனங்களுக்குச் சாத்தியமான வகையில், தவறான விளக்கங்களை அளிப்பதை நீக்கிப்போடவும் உதவக்கூடும். இது, பின்வருமாறு மூன்று உதாரணங்களில்*

செயல்விளக்கப்படுத்தப்படுகிறது.

1. *மாற்கு 2:23-28ல், இயேசு ஓய்வுநாளுக்கான பிரமாணத்தை மீறினாரா?* ஓய்வுநாளில் இயேசுவின் சீஷர்கள் தானியக் கதிர்களைக் கொய்துகொண்டிருந்ததால், பரிசேயர்களால் இயேசு விமர்சிக்கப்பட்டார். அவர்கள், "இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றார்கள்" (மாற்கு 2:24). இதற்கு இயேசுவின் பதிலானது, அவரது சீஷர்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிநடந்தனர் என்பதை மறுப்பதாக இருக்கவில்லை. அவர் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறினாரா அல்லது அவ்வாறு செய்ய அவர் தமது சீஷர்களை அனுமதித்தாரா? இதற்கான பதிலானது பல காரணங்களினால் எதிர்மறையாக இருக்க வேண்டும்: (1) சீஷர்கள் செய்துகொண்டிருந்த செயலை, நியாயப்பிரமாணம் குறிப்பாகத் தடைசெய்யவில்லை, யூதப்பாரம்பரியங்கள் தடைசெய்தன, ஆனால் அந்தப் பாரம்பரியங்கள் தேவனிடத்தில் இருந்து அல்ல, மனிதரிடத்தில் இருந்தே தோன்றிற்று. (2) பரிசேயர்கள் குற்றம் சாட்டினர், மற்றும் அவர்களின் வார்த்தை கேள்வியின்றி ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது.

இத்துடன் கூடுதலாக, வேதாகமத்தின் வேறொரு இடத்தில் உள்ள போதனையானது, மோசேயின் நியாயப்பிரமாணத்தை இயேசு மீறிநடக்கவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. அவர் "நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவராகப் பிறந்தார்'' (கலாத்தியர் 4:4), ஆகவே அதன் விதிகளுக்கு அவர் கீழ்ப்படிந்திருந்தார் என்று நாம் அறிகிறோம். அவர் பாவமின்றி இருந்தார் என்றும் நாம் வாசிக்கிறோம் (எபிரெயர் 4:15). அவர் நியாயப்பிரமாணத்தை மீறியிருந்தால், அவர் பாவம் செய்திருப்பார். மற்ற இடங்களில் வேதவசனத்தின் எளிய போதனையானது, மாற்கு 2:23-28ல் பதிவுசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் இயேசு நியாயப்பிரமாணத்தை மீறிவில்லை என்பதை நிச்சயப்படுத்துகிறது.

2. *ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கை என்பது வெளிப்படுத்தின விசேஷம் 20ல் போதிக்கப்பட்ட வசனரீதியான கருத்தாக உள்ளதா?* ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கை என்பது, வெளிப்படுத்தின விசேஷம் 20ல் பேசப்படும் "ஆயிரம் ஆண்டுகள்" என்பதற்கு விளக்கம் அளிக்கும் வழியொன்றாக உள்ளது; இது கிறிஸ்து ஆயிரம் ஆண்டுகளுக்கு ("முன்னதாக") திரும்ப வருவார் என்று போதிக்கிறது. ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையானது, கடைசி விஷயங்களைப் பற்றிய வசனப்பகுதிகள் யாவற்றையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது, கேள்விகேட்கப்படக் கூடிய பல உபதேசங்களை உள்ளடக்குகிறது; ஆனால் உண்மையில் இது எளிய வசனப்பகுதிகளுக்கு முரண்படுகிறது என்பதே, இந்த உபதேசத்தில் உள்ள மிகப்பெரிய பிரச்சனையாக இருக்கலாம். (1) *"என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல"* என்று இயேசு கூறியிருக்க (யோவான் 18:36), ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையானது, இயேசு பூமியின்மீது ஆளுகைசெய்யும் காலகட்டம் ஒன்றை முன்னெதிர் நோக்குகிறது. (2) பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட இராஜ்யம் இன்னமும் எதிர்காலத்தில் வருவதாக உள்ளது மற்றும் இது இயேசு திரும்பவும் வந்து, எருசலேமில் தமது அரியணையை நிலைநாட்டி அதன்பின்பு ஆயிரம் ஆண்டுகள் தமது இராஜ்யத்தின்மீது ஆளுகைசெய்யும்போது அமைக்கப்படும் என்று ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கை போதிக்கிறது. இருப்பினும். முதல் நூற்றாண்டிலேயே தேவனுடைய இராஜ்யம் ஏற்கனவே இங்கிருந்தது என்று புதிய ஏற்பாடு எளிமையாகப் போதிக்கிறது (கொலோசேயர் 1:13, 14). (3) ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக்

கொள்கையாளர்கள், சபை என்பது தேவனுடைய திட்டத்தில், பின்பு ஏற்பட்ட ஒரு சிந்தனையாக உள்ளது - அதாவது, யூதர்கள் இயேசுவை பூமிக்குரிய அரசராக ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் சபை நிலைநாட்டப்பட்டது - என்று நம்புகின்றனர். இதற்கு நேர்மாறாக வேதாகமம், சபை என்பது நித்தியத்தின் கடந்த காலத்திலேயே தேவனுடைய திட்டமாக இருந்தது என்று போதிக்கிறது (எபேசியர் 3:9-11).

இந்த மற்றும் பிற ஆழ்ந்த சிந்தனைகளில் இருந்து நாம், தெளிவான வசனப்பகுதிகளின் அடிப்படையில் அமைவதற்கு மாறாக, கருகலான வசனப்பகுதிகளின் அடிப்படையில் அமைந்துள்ள மார்க்க முறைமையே, ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களின் முதன்மைப் பிரச்சனை என்று முடிவு செய்ய இயலும். இதன் உபதேசங்கள், கடினமான வசனப்பகுதிகள் பலவற்றில் இருந்து வருகின்றன; பின்பு இவைகள், எளிய வசனப்பகுதிகளை, வேதவாக்கியங்களை ஆராய்வதற்கு முன்னதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகேட்கப்படக் கூடிய முடிவுகளுக்குப் பொருந்துமாறு அவைகளுக்கு விளக்கம் அளிக்க (அல்லது மறுவிளக்கம் அளிக்க) பயன்படுத்தப் படுகின்றன.

3. *1 கொரிந்தியர் 15:29ம் வசனம் போதிப்பது என்ன?* இவ்வசனம், ''மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?'' என்று கூறுகிறது. இவ்வசனப்பகுதியின் அர்த்தம் குறித்து விளக்கவுரையாளர்கள் பிரிவுபட்டுள்ளனர். இருப்பினும் இதைப்பற்றி இரண்டு கூற்றுகள் சற்றே நிச்சயத்துடன் ஏற்படுத்தப்பட முடியும். (அ) பவுல் ஏற்படுத்திய கருத்தைப் பற்றிக் கேள்வி எதுவும் இருக்க முடியாது: மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றவர்கள் உயிர்த்தெழுதலை மறுத்தால், அவர்கள் சீர்பொருத்தமற்றவர்களாக இருந்தனர் என்றாகிறது. (ஆ) இவ்வசனப்பகுதி எதை அர்த்தப்படுத்தினாலும், மக்கள் - தாங்கள் மரிப்பதற்கு முன்போ அல்லது மரித்த பின்போ - மற்றவர்கள் ஞானஸ்நானம் பெறுவதால் இரட்சிக்கப்பட முடியும் என்று அர்த்தப் படுத்துவது இல்லை. ஒவ்வொரு தனிநபரும், தாம் ஞானஸ்நானம் பெறுவதா இல்லையா என்பதை தமக்காக அவரே தீர்மானிக்க வேண்டும் (காண்க நடபடிகள் 2:36-40). மேலும் புதிய ஏற்பாடு, *“அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே”* என்று தெளிவாகக் கூறுகிறது (எபிரெயர் 9:27). 1 கொரிந்தியர் 15:29ஐப் புரிந்துகொள்வதற்கான முயற்சியில், சாட்சியங்கள் யாவற்றையும் சேகரித்தபின்பு மற்றும் நமது மிகச்சிறப்பான பிரயாசங்களை முன்வைத்த பின்பு, நாம் பின்வருவது போன்ற சிலவற்றைக் கூறலாம்: “இது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நான் உறுதியாக அறியவில்லை, ஆனால் இது எதை அர்த்தப்படுத்தவில்லை என்று நான் உறுதியாக அறிவேன்!” தெளிவான மற்ற வசனப்பகுதிகளை ஆழ்ந்து சிந்தித்தலானது, ஒரு வசனப்பகுதி அர்த்தப்படுத்துவது என்ன என்பதை முடிவாக நிரூபிக்காது என்றிருக்கையில், அது சாத்தியமான தவறான முடிவுகளை நீக்கிப் போடலாம்.

## முடிவுரை

வேதாகமத்தின் குறிப்பிட்ட தலைப்புகள் பற்றி நாம் எவற்றை விசுவாசிக்க வேண்டும் என்பதை அடைதல் என்பது வேதவசனங்களுக்கு விளக்கம்

அளித்தலின் ஒரு குறிக்கோளாக உள்ளது. அந்தக் குறிகோளை நாம் எவ்வாறு சாதித்து நிறைவேற்றக் கூடும்? இந்தப் பாடத்திலும் இதற்கு முந்திய பாடத்திலும் நாம் படித்த நான்கு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதால் இதை நாம் சாதித்து நிறைவேற்ற முடியும்.

1. ஒரு பாடக்கருத்தின் மீதான வசனப்பகுதிகளில் தெளிவான அர்த்தத்தையும் நடைமுறைப் பயன்பாட்டையும் கண்ணோக்கித் தேடுங்கள்.
2. ஒரு பாடக்கருத்தின் மீதான இறையியல்ரீதியான மறைகருத்துக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.
3. பொருத்தமான எல்லா வேதாகம சாட்சியங்களின் அடிப்படையிலேயே எந்தப் பாடக்கருத்தின் மீதும் முடிவுகளை அடையுங்கள்.
4. கடினமான வசனப்பகுதிகளுக்கு விளக்கம் அளிப்பதற்கு எளிய வசனப்பகுதிகளைப் பயன்படுத்துங்கள்.

வேதாகம அறிவை நாம் ஊக்கமாக நாடுகிறபோது, வேதாகமத்தின் தலைப்புக்களைப் பற்றிக் கற்றுக்கொள்வதற்கு இந்த நான்கு வழிமுறைகள் நமக்கு உதவக்கூடும்.

---

குறிப்புகள்

[1]இப்படிப்பட்ட ஒரு கண்ணோக்கு, வேதாகமம் ஒன்றல்ல ஆனால் பல "இறையியல்களை" போதிக்கிறது என்று நம்பும் பலரது கண்ணோட்டத்துடன் கூர்மையாக முரண்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பவுல், பேதுரு மற்றும் யோவான் ஆகியோர் மாறுபட்ட கருத்துக்களைப் போதித்தனர் என்றும் அவர்கள் ஒருவர் மற்றவருடன் முரண்பட்டனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். [2]D. R. Dungan இந்த முறைமையே *Hermeneutics* (Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 82-105. என்ற தமது புத்தகத்தில் பரிந்துரைத்தார். [3]இந்த முறைமைக்கு எவரொருவரும் பெயரிடுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே, மக்கள் இவ்வகையில் உணர்ந்தறிந்து கொண்டிருந்தனர். "விதிவருநிலை உணர்ந்தறிதல்" என்ற சொற்றொடரை உணர்ந்தறியாதவர்களும்கூட இன்னமும் விதிவருநிலையில் உணர்ந்தறிகின்றனர். சிலவேளைகளில் மக்கள், இந்த முறைமையைச் சரியற்ற வகையில் பயன்படுத்தி, தவறான முடிவுகளை அடைகின்றனர், ஆனாலும் அவர்கள் இன்னமும் விதிவருநிலையில் உணர்ந்தறிகின்றனர். [4]இந்த எண்ணிக்கை Robert Young, *Young's Analytical Concordance to the Bible* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.). என்ற புத்தகத்தின் அடிப்படையில் குறிப்பிடப் பட்டுள்ளது. [5]யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிக் கையாளும் வசனப்பகுதிகள் (மாற்கு 1:4 போன்றவை) உள்ளடக்கவில்லை, ஏனெனில் அவைகள் பொருத்தமானவையாக இராதிருக்கலாம். யோவான் ஞானஸ்நானம் கொடுத்தபோது மோசேயின் பிரமாணம் இன்னமும் அமுலில் இருந்தது. [6]மாற்கு 16:15, 16உட்பட, மாற்கு சுவிசேஷத்தின் கடைசியில் உள்ள பல வசனங்கள், மாற்கு சுவிசேஷத்தின் மூலப்பிரதியின் பகுதியாக இருந்தனவா இல்லையா என்பது பற்றிச் சில கேள்விகள் நிலவுகின்றன. இவ்வசனப்பகுதியின் உண்மைத்தன்மை பற்றிய நல்ல விவாதங்கள் ஏற்படுத்தப்பட முடியும் என்பதால், மாற்கு 16:16 இந்தப் பட்டியலில் உள்ளடக்கப் பட்டிருக்கிறது.

*இது சேர்க்கப்படாமல் இருந்தாலும், இதைச் சேர்க்காதிருத்தலானது, ஞானஸ்நானம் பற்றிய புதிய ஏற்பாட்டின் முழுமையான போதனையை மாற்றாது.* [7]*நடபடிகள் 8:37ம் வசனம் மிகப்பழங்காலத்திய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுவதில்லை என்ற காரணத்தினால் அது சேர்க்காமல் விட்டுவிடப் பட்டுள்ளது.* NASB *வேதாகமம் இவ்வசனத்தை அடைப்புக்குறிகளுக்குள் வைத்து அந்த செயல்விளைவுக்கு ஒரு விளக்கக் குறிப்பையும் கொடுத்துள்ளது.* [8]Dungan, *88.* [9]*இவ்வசனங்களில் "ஞானஸ்நானம்" என்பது, பாவமன்னிப்புக்கென்று முழுக்காட்டுதலினால் விசுவாசிகள் பெறும் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்பது இந்த வசனப்பகுதிகளில் இருந்தும் மற்ற வேதவசனப் பகுதிகளில் இருந்தும் தெளிவாகிறது.*

---

# வேதாகமத் தலைப்பு ஒன்று குறித்த முடிவை அடைவதற்கு விதிவருநிலை முறைமையைப் பயன்படுத்துவதற்கான 8 படிநிலைகள்

1. *கவனத்தில் உள்ள பாடக்கருத்தைக் கையாளும் வேதவசனப் பகுதிகள் பலவற்றைச் சாத்தியமான அளவுக்குக் கண்ணோக்குங்கள்.*
2. *சாத்தியமானால், ஒவ்வொரு பாடக்கருத்தையும் மட்டுப்படுத்துங்கள்.*
3. *முடிவுகளை அடைவதற்குப் பொருத்தமான வசனப்பகுதிகளை மட்டும் பயன்படுத்துங்கள்.*
4. *ஒவ்வொரு வசனப்பகுதிக்கும் அதன் சந்தர்ப்பப் பொருளில் விளக்கம் அளியுங்கள்.*
5. *ஒவ்வொரு வசனப்பகுதிக்கும் அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் விளக்கம் அளித்தலினால் கவனத்தில் உள்ள வசனப்பகுதிகள் கேள்வியில் உள்ள பாடக்கருத்துடன் தொடர்புள்ளவை என்று உறுதிப்படுத்திய பின்பு, அவைகள் போதிக்கும் கருத்தை, உபதேசத்தின் இசைவிணக்கமான, முறைப்படியான கூற்றாக ஒன்றிணையுங்கள்.*
6. *வடிவமைக்கப்பட்ட உபதேசத்தைச் சோதித்து அறியுங்கள்.*
7. *முடிவானது வேதாகமத்தின் எளிய போதனைக்கு முரண்பட்டது என்றால், அல்லது ஏதோ சில காரணங்களினால் அது ஏற்றுக்கொள்ளப்பட இயலாதது என்று நிரூபிக்கப்பட்டால், பின்னோக்கிச் சென்று பொருத்தமான வேதவசனங்களை மறுபடியும் படித்து மாற்று சாத்தியக்கூறுகள் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.*
8. *கடைசி முடிவானது வேதாகமத்தின் மற்ற போதனைகளுடன் முரண்படாது இருக்கும்போது, கிடைக்கும் சாட்சியத்தால் அது நிறைவாக ஆதரிக்கப்பட்டு இருக்கும்போது, தேவனிடத்தில் இருந்து வந்த ஒரு உபதேசமாக அதை விசுவாசியுங்கள் மற்றும் அதைப் போதியுங்கள்.*